# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் செப்டம்பர் மாத அவரசக்கூட்டம் 15.09.2020 ஆம் தேதி பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெற்றது.

## பொருள் எண்.1

இந்நகராட்சிக்கு எதிராக தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் (NGT) திருமதி.T.சுஜிதா ஜெஸி என்பவர் தொடரப்பட்ட வழக்கு எண்.OA.167/2017(SZ) தீர்ப்பாணை பெறப்பட்டது. மேற்படி வழக்கினை நடத்தியதற்கான வழக்கறிஞர் கட்டணம் திரு.S.கமலேஷ் கண்ணன், அரசு வழக்கறிஞர் சென்னை உயர்நீதிமன்றம் அவர்களின் கடிதத்தின் படி ரூ.15000/- மேற்படி வழக்கறிஞருக்கு வழங்க மன்ற அனுமதிக்கு.

ந.க.எண்.2278/2016/எச்1

**தீர்மானம் எண்.2349 அனுமதி வழங்கப்படுகிறது**

## பொருள் எண்.2

இந்நகராட்சி குடிநீர் வினியோக பணிகளுக்காக 4 தினக்கூலி பணியாளர்களை 01.04.2020 முதல் 31.03.2021 வரை ஓராண்டிற்கு ஒப்பந்த அடிப்படையில் பணிக்கு அமர்த்துவதற்காக மிதிப்பீடு ரூ.6,80,000/-க்கு தயார் செய்யப்பட்டு, மன்றத் தீர்மானம் எண்.2209 நாள் 28.02.2020-ன் படி, மன்ற ஒப்புதல் பெறப்பட்டது. மேற்படி பணிக்கு 17.03.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஒப்பந்தப்புள்கள் பெறப்பட்ட நிலையில், குடிநீர் பிரிவில் பணிபுரிந்து வந்த திரு.ராஜேஷ் துப்புரவு பணியாளர் (மாற்றுப்பணி) களப்பணி உதவியாளராக பதிவு உயர்வு பெற்றதால், குடிநீர் வினியோகத்திற்கு பணியாளர் குறைவாக உள்ளதை கருத்தில் கொண்டு, கூடுதலாக ஒரு பணியாளரை ஒப்பந்த அடிப்படையில் பணிக்கு அமர்த்த ஆணையரின் அனுமதி பெறப்பட்டது. அதன் பின்னர் மன்றத் தீர்மானம் எண்.2229 நாள் 31.03.2020-ன் படி, திரு.சி.செல்லநாடார் ஒப்பந்நதாரரின் மதிப்பீட்டு விகித ஒப்பந்தப்புள்ளிக்கு மன்ற ஒப்புதல் பெறப்பட்டு கடந்த 01.04.2020-ல் பணி உத்தரவு வழங்கப்பட்டது.

மேற்காணும் பணிக்கு ஏற்கனவே மன்ற ஒப்புதல் பெறப்பட்ட 4 பணியாளர்களுக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.6,80,000/-ல் இருந்து 5 தினக்கூலி பணியாளர்களுக்கு 4 மாதங்கள் (4/2020 முதல் 7/2020 வரை) ஆணையரின் முன் அனுமதி பெறப்பட்டதன் அடிப்படையில் ஊதியம் வழங்கப்பட்டுள்ளது. இனிவரும் 8 மாதங்களுக்கும் (8/2020 முதல் 3/2021 வரை) மதிப்பீட்டுத் தொகை ரூ.6,80,000/-க்கு உள்ளாகவே ஊதியம் வழங்கி பணிகள் மேற்கொள்ளப்படும் என்ற விவரமும், ஏற்கனவே அனுமதி பெறப்பட்ட 4 தினக்கூலி பணியாளர்களுடன் கூடுதலாக ஒரு தினக்கூலி பணியாளரை ஒப்பந்த அடிப்படையில், ஆணையரின் முன் அனுமதி பெற்று மதிப்பீட்டுத் தொகைக்கு உள்ளாகவே பணிக்கு அமர்த்திய விவரமும் மன்றத்தின் தகவலுக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.283/2020/இ1

**தீர்மானம் எண்.2350 அனுமதி வழங்கப்படுகிறது**

## பொருள் எண்.3

இந்நகராட்சி திட்டப் பணிகள் தொடர்பான விளம்பரத்தை தினமுரசு பத்திரிக்கையின் 14.08.2020 ஆம் தேதிய சுதந்திர தின சிறப்பு மலரில் வெளியிட்ட வகையில் விளம்பர கட்டணம் ரூ.9975/-ஐ வழங்க கேட்டு பட்டியல் எண்.9096 நாள் 14.08.2020 சம்மந்தப்பட்ட பத்திரிக்கை அலுவலகத்திலிருந்து வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து தினமுரசு பத்திரிக்கை அலுவலகத்திற்கு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.2045/2012/இ1

**தீர்மானம் எண்.2351 அனுமதி வழங்கப்படுகிறது**

## பொருள் எண்.4

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கான பயன்பாட்டில் உள்ள மின்கலத்தில் இயங்கும் வாகனங்களில் பழுது ஏற்பட்டுள்ளதால், நகராட்சி பகுதிகளில் உள்ள குறுகலான தெருக்களில் குப்பை சேகரிப்பதில் தொய்வு ஏற்பட்டுள்ளது. எனவே திடக்கழிவு மேலாண்மை பணிகளில் மேற்படி வாகனத்தின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு. பணியின் அவசர அவசியம் கருதி, பெறப்பட்ட உள்ளூர் விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை<br>ரூ. |
|---|---|---|
| 1. | M/s.Akshaya Motor works,<br>Kulasekaram Road,<br>Unnamalai Kadai (p.o) | Rs.71,744/-<br>(Including 18% GST) |
| 2. | M/s.Mathava Motors,<br>Christ Nagar, Main Road,<br>Vellamadam | Rs.67,850/-<br>(Including 18% GST) |
| 3. | M/s.Ganesh Motor Works,<br>6B, Sasthancoil street,<br>Puthukudieruppu, Vadasery<br>Nagercoil | Rs.69,974/-<br>(Including 18% GST) |

மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில், M/s.Mathava Motors, Vellamadam நிறுவனம் அளித்துள்ள குறைவான விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.924/2020/இ1

**தீர்மானம் எண்.2352 அனுமதி வழங்கப்படுகிறது**

## பொருள் எண்.5

இந்நகராட்சி திட்டப்பணிகள் விவரத்தை தினகரன் நாளிதழின் 31.08.2020 ஆம் தேதிய தமிழக அரசின் 4 ஆம் ஆண்டு சாதனை மலரில் வெளியிட்ட வகையில் விளம்பர கட்டணம் ரூ.9,975/-ஐ செலுத்த கேட்டு M/s.KAL Publications (p) Ltd., Nagercoil அலுவலகத்தில் இருந்து பட்டியல் எண்.3300237251 நாள் 31.08.2020 வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை சம்மந்தப்பட்ட பத்திரிக்கை அலுவலகத்திற்கு நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது. ந.க.எண்.2045/2012/இ1

**தீர்மானம் எண்.2353 அனுமதி வழங்கப்படுகிறது**

## பொருள் எண்.6

இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளில் 01.11.2020 முதல் 31.10.2021 வரை 45 ஒப்பந்த பணியாளர்களை கொண்டு திடக்கழிவு மேலாண்மை உள்ளிட்ட அனைத்து பணிகளை ரூ.108.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில அளவிலான தமிழ் (மாலை முரசு) மற்றும் ஆங்கிலம் (New Indian Express) பத்திரிக்கைகளின் 28.08.2020 ஆம் தேதிய பதிப்பில் வெளியிட்ட வகையில் ரூ.72,188/-ஐ வழங்க கேட்டு, M/s.Eyedea Brand solutions, Chennai நிறுவனத்திடமிருந்து பட்டியல் எண்.1781 நாள் 28.08.2020 வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.809/2020/எச்1

**தீர்மானம் எண்.2354 அனுமதி வழங்கப்படுகிறது**

## பொருள் எண்.7

இந்நகராட்சிக்கு, 14-வது மத்திய நிதிக்குழு திட்டம் : 2019-20-ன் கீழ், ரூ.77.27 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதில், 5 எண்ணம் சாலைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பணிகளில் கீழ்காணும் இரண்டு பணிகள் மதிப்பீட்டை விட குறைவான செலவினத்தில் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

| **வ. எண்** | **சாலைப்பணியின் பெயர்** | **மதிப்பீடு ரூ.** | **செலவினம் ரூ.** | **சேமிப்புத் தொகை ரூ.** |
|---|---|---|---|---|
| 1. | குளச்சல் நகராட்சி - வார்டு எண்.4 செட்டித்தெரு மற்றும் குறுக்கு தெருக்களில் பேவர் பிளாக் சாலை அமைத்தல். | 8,37,000/- | 7,88,871/- | 48,129/- |
| 2. | குளச்சல் நகராட்சி - வார்டு எண்.18 வாய்க்கால் தெருவில் சிமெண்ட் காங்கிரீட் சாலை அமைத்தல். | 19,60,000/- | 13,64,957/- | 5,95,043/- |
| | **மொத்தம்** | **29,97,000/-** | **21,53,828/-** | **6,43,172/-** |

மேற்காணும் திட்டப் பணிகளில் மீதமுள்ள தொகை ரூ.6,43,172/- ஆகும். இந்நிலையில், இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21,22 இக்பால் தெருவில் சிமெண்ட் காங்கிரீட் சாலை மிகவும் மோசமாக பழுதடைந்து, போக்குவரத்திற்கும், பொது மக்களுக்கும் மிகுந்த இடையூறு ஏற்பட்டு வருவதாக பொது மக்களால் புகார் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, நகராட்சி நிதி நிலையினை கருத்தில் கொண்டும், பொது நலன் கருதியும், திட்டப் பணிகளுக்காக விடுவிக்கப்பட்ட தொகையினை முழுமையாக சாலைப்பணிகளுக்கு செலவிடப்பட வேண்டியதன் அவசியத்தை கருத்தில் கொண்டும், திட்டப் பணிகளில் மீதமுள்ள தொகை ரூ.6,43,172/-ல் வார்டு எண்.21,22 இக்பால் தெருவில் பேவர் பிளாக் சாலை அமைப்பதற்காக மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, பணியின் அவசர அவகியத்தை கரத்தில் கண்டு, மன்ற அனுமதியை எதிர்நோக்கி 11.09.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின் வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.தேவராஜ்,<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.06% அதிகம் ரூ.5,53.323.26/- |
| 2. | திரு.சி.செல்ல நாடார்<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.01% குறைவு ரூ.5,52,913.26/- |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.சி.செல்லநாடார், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். எனவே மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கவும், மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1430/2019/இ1

**தீர்மானம் எண்.2355 அனுமதி வழங்கப்படுகிறது**

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் செப்டம்பர் மாத சாதாரணக்கூட்டம் 30.09.2020 ஆம் தேதி பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெற்றது.

## பொருள் எண்.1

இந்நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்தில் உள்ள Boiler Stove பழுதடைந்துவிட்டது. Boiler Stove சரி செய்த வகையில் ரூ.3850/- அ1 எழுத்தர் (திரு.டென்னிஸ் மாற்றுப்பணி) என்பவரால் செலவு செய்யப்பட்டது. மேற்படி தொகையை அன்னாருக்கு (திரு.டென்னிஸ்) நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.3/2020/அ3

**தீர்மானம் எண்.2356 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.2

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெருவில் நிறுவப்பட்டுள்ள போர் வெற்றி சின்ன நினைவு தினக் கொண்டாட்டம் 31.07.2019 அன்று 19th Madras, pangode Military Station, Trivandram இராணுவ படை பிரிவினரால் அனுசரிக்கப்பட்டதை முன்னிட்டு, போர் வெற்றித் தூண் பூங்காவில் சுற்றுச் சுவர் முழுவதும் வர்ணம் பூசுதல், மரம் வெட்டும் இயந்திரத்தை கொண்டு புல் மற்றும் Border செடிகளை வெட்டி அழகுப்படுத்துதல், வரலாற்று சிற்பங்களுக்கு Oil painting செய்தல், போர் வரலாறு மற்றும் சுற்றுலா தலம் குறித்த Flex board புதிதாக வைத்தல், கழிவறையின் உடைந்த கதவை மாற்றி புதிய கதவு பொருத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.70,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி சட்ட விதி பிரிவு 15-ன் கீழ், நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் மூலம் பணியினை மேற்கொண்டு, அதற்கான செலவினம் ரூ.66,873/-ஐ நகராட்சி பொது நிதியின் கீழ் வழங்கியுள்ள விவரம் மன்றத்தின் தகவலுக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.810-1/2020/இ1

**தீர்மானம் எண்.2357 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.3

இந்நகராட்சியில், திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக பயன்பாட்டில் உள்ள மின்கலத்தில் இயங்கும் வாகனங்கள் பழுதாகியுள்ளதால், நகராட்சி பகுதியில் சேகரிக்கப்படும் குப்பைகளை பிரித்து வாங்கி உரக்கிடங்கில் கொட்டும் பணிகளில் தொய்வு ஏற்பட்டுள்ளது. எனவே மேற்படி வாகனங்களில் பழுது நீக்கப்பணிகள் மேற்கொள்வதற்காக, பெறப்பட்ட விலைப்புள்ளிகளில், குறைந்த விலைப்புள்ளி (வாகனம் ஒன்றிற்கு ரூ.67,750/-) அளித்த M/s.Mathava Motors, Vellamadam நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் தனது தீர்மானம் எண்.2352, நாள் 15.09.2020-ன் மூலம் அனுமதி வழங்கியுள்ளது எனவே நகராட்சி நிதி நிலையினை கருத்தில் கொண்டும், பொது சுகாதாரப்பணிகளில் மேற்படி வாகனங்களின் தேவையினை கருத்தில் கொண்டும், மூன்று எண்ணம் மின் கலத்தில் இயங்கும் வாகனங்களில் பழுது நீக்கப்பணிகள் மேற்கொள்வதற்காக மதிப்பீடு ரூ.2,04,000/-க்கு தயார் செய்யப்பட்டு, பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி, M/s.Mathava Motors, Vellamadam நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதற்கும், மேற்படி பழுது நீக்கப்பணிகளுக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.924/2020/இ1

**தீர்மானம் எண்.2358 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.4

இந்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை மற்றும் மனித வள மேம்பாட்டுத் துறை ஆகிய இரு அமைச்சகங்கள் இந்திய தொழில் நுட்ப கல்வி குழுவுடன் இண்ந்து நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் TULIP (The Urban Learning Internship Programme) பயிற்சி திட்டத்தின் கீழ், இந்நகராட்சி பகுதிக்குட்பட்ட இளம் பட்டதாரிகளை ஊக்குவிக்கும் பொருட்டு பல்வேறு பயிற்சிகள் வழங்குதல் தொடர்பான அறிவிக்கையினை மாலை மலர் நாளிதழின் 05.09.2020 ஆம் தேதிய பதிப்பில் வெளியிட்ட வகையில் விளம்பர கட்டணம் ரூ.3780/-ஐ வழங்க கேட்டு பட்டியல் எண்.NGL-D20090024 நாள் 05.09.2020 வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.916/2020/இ1

**தீர்மானம் எண்.2359 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.5

இந்நகராட்சி அலுவலக வளாகம், பேருந்து நிலையம் மற்றும் அம்மா உணவகம் ஆகியவற்றின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டும், அன்றாட நிகழ்வுகளை கண்காணிப்பதற்கு ஏதுவாகவும், அலுவலக வளாகத்தில் 5 எண்ணம், அம்மா உணவகம் மற்றும் பேருந்து நிலைய நுழைவு வாயில் ஆகியவற்றில் தலா 1 எண்ணம் சேர்த்து மொத்தம் 7 எண்ணம் கண்காணிப்பு கேமராக்கள் (CCTV's) பொருத்துவதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.1,60,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1012/2020/இ1

**தீர்மானம் எண்.2360 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.6

இந்நகராட்சிக்கு சொந்தமான உப்பளம் பகுதி உரக்கிடங்கில் ஏற்கனவே அமைக்கப்பட்ட ஆழ்துளை கிணறு செயலிழந்து விட்டதால், தற்போது உரக்கிடங்கில் தண்ணீர் வசதி இல்லாமல் உள்ளது. இதனால் உரக்கிடங்கில் நடைபெறும் பணிகளில் தொய்வு ஏற்பட்டுள்ளதுடன், உரக்கிடங்கில் அமைக்கப்பட்டு பசுமை வேலியின் மரம் மற்றும் செடிகள் பாதிப்புக்குள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே பாம்பூரி வாய்க்காலின் அருகில் வட்டு இறக்கி, சுற்றிலும் கருங்கல் கட்டு கட்டி, தண்ணீர் சேகரித்து 1.50 HP மோட்டார் மூலம், ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் தண்ணீர் ஏற்றி, உரக்கிடங்கு பயன்பாட்டிற்கு தண்ணீர் கொண்டு செல்லும் வகையில் குழாய் அமைத்தல் பணிகளை மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.1,10,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.925/2020/இ1

**தீர்மானம் எண்.2361 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.7

இந்நகராட்சி உப்பளம் பகுதி உரக்கிடங்கில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு தேவையான Conveyor Belt, Shredder Machine, Incinerator and Weighing Machine ஆகியவற்றை கொள்முதல் செய்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.6,00,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.925/2020/இ1

**தீர்மானம் எண்.2362 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.8

இந்நகராட்சி பகுதியில் தினந்தோறும் தரம் பிரித்து பெறப்படும் கழிவுகள் உப்பளம் பகுதி உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்பட்டு, மக்கும் குப்பைகளை அட்டி (Heaps) போடப்பட்டு, சுழற்சி (Rotate) செய்து, குப்பைகளை மக்க வைத்து கலவை உரம் தயார் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில், திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு தேவையான இயந்திரங்கள் (Machineries) நிறுவப்படாமல் உள்ளதால், திடக்கழிவு மேலாண்மை பணிகளை முழுமையாக செயல்படுத்த இயலாத நிலை உள்ளதை கருத்தில் கொண்டு, உரக்கிடங்கில் தற்போது பயன்பாட்டில் உள்ள Windrows Platform-ஐ MCC Machineries Shed ஆக மாற்றம் செய்வதற்கு தேவையான கட்டமைப்புகளை கட்டி, மின் வசதி செய்தல் மற்றும் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழுமம் (IUDM) 2011-12-ல் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு, தற்போது மேற்கூரைகள் பழுதடைந்துள்ள Vermi Compost Yard shed -ல் மேற்கூரைகளை மாற்றுதல் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்கான தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.9,80,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.925/2020/இ1

**தீர்மானம் எண்.2363 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.9

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு கட்டிடத்தில் காலங்கடந்த கோப்புகள் மற்றும் ஆவணங்கள் குவியலாக குவித்து கிடப்பதால், தேவைப்படும் பழைய ஆவணங்களை கண்டு பிடித்து எடுப்பதில் சிரமம் ஏற்பட்டு வருகிறது. மேலும் அலுவலக கோப்புகளை பராமரிப்பதற்கு தனியாக Record Room இல்லாமல் உள்ளது. எனவே பொது சுகாதார பிரிவு கட்டிடத்தின் மேல் பகுதியில் Galvanished Iron sheet-ஐ கொண்டு சுவர் மற்றும் மேற்கூரை (Wall shed) அமைத்து Record Room ஆக பயன்படுத்தும் வகையில், மேற்படி அறையின் உட்புறம் கோப்புகள் மற்றும் ஆவணங்களை பாதுகாப்பாக அடுக்கி வைப்பதற்கு ஏதுவாக Racks அமைத்தல் பணிகளை மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.8,90,000/-க்கும்,மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1004/2020/இ1

**தீர்மானம் எண்.2364 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.10

இந்நகராட்சி திட்டப்பணிகள் தொடர்பான விளம்பரத்தை மாலை தமிழகம் பத்திரிக்கையின் 02.09.2020 ஆம் தேதிய பதிப்பில் வெளியிட்ட வகையில் விளம்பர கட்டணம் ரூ.14,700/-ஐ செலுத்த கேட்டு பட்டியல் எண்.MT-3029-2020-21 நாள் 03.09.2020 வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.2045/2012/இ1

**தீர்மானம் எண்.2365 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.11

இந்நகராட்சி குடிநீர் வினியோக பயன்பாட்டிற்கு தேவையான 3”,4” சுவிஸ் மற்றும் காற்று வால்வுகள் (Sluice & Air valve) மற்றும் 3 Phase 10 HP பேனல் போர்டுகள் 5 எண்ணம் வாங்கும் பணியினை ரூ.4,10,000/-மதிப்பீட்டில், நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு, மன்றம் தனது தீர்மானம் எண்.2337 நாள் 28.08.2020-ன் மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 18.09.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.தேவராஜ்,<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.94% அதிகம்<br>ரூ.3,62,733/- |
| 2. | திரு.சி.சுரேஷ்<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.03% குறைவு<br>ரூ.3,59,268/- |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.சி.சுரேஷ், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.03% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். எனவே மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.894/2020/இ1

**தீர்மானம் எண்.2366 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.12

இந்நகராட்சிக்குட்பட்ட மாதா காலனி அருகில் சைமன்காலனி பிரதான சாலையில் புதிதாக வடிகால் ஓடை மற்றும் பேவர் பிளாக் தளம் அமைப்பதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.4,20,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது, நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு, மன்றம் தனது தீர்மானம் எண்.2332 நாள் 28.08.2020-ன் மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 18.09.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.எஸ்.ஜாண்றோஸ்<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.03% குறைவு<br>ரூ.3,60,919.50/- |

| | | |
|---|---|---|
| 2. | திரு.சி.சந்திரசேகர்<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.16% அதிகம்<br>ரூ.3,61,590/- |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.எஸ்.ஜாண்றோஸ், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.03% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். எனவே மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.843/2020/இ1

**தீர்மானம் எண்.2367 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.13

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4 ஆசாத் நகர் சாலையில் (கிராம நிர்வாக அலுவலகம் பின்புறம்) வடிகால் ஓடை மற்றும் சாலை சீரமைத்தல் பணிகளை ரூ.5,20,000/- மதிப்பீட்டில், நகராட்சி பொது, நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு, மன்றம் தனது தீர்மானம் எண்.2334 நாள் 28.08.2020-ன் மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 18.09.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.சுரேஷ்<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.53% அதிகம்<br>ரூ.4,58,295/- |
| 2. | திரு.எ.விஷ்ணு ராம்<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.04% குறைவு<br>ரூ.4,55,700/- |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.எ.விஷ்ணுராம், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.04% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். எனவே மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.873/2020/இ1

**தீர்மானம் எண்.2368 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.14

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.24-ல் சிங்கன்காவு பகுதியில் JSR Gas Godown அருகில் வடிகால் ஓடை அமைக்கும் ரூ.8,50,000/- மதிப்பீட்டில், நகராட்சி பொது, நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு, மன்றம் தனது தீர்மானம் எண்.2333 நாள் 28.08.2020-ன் மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 18.09.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.சுரேஷ்<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.74% அதிகம்<br>ரூ.7,48,832/- |
| 2. | திரு.எ.விஷ்ணு ராம்<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.04% குறைவு<br>ரூ.7,43,012/- |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.எ.விஷ்ணுராம், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.04% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். எனவே மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.874/2020/இ1

**தீர்மானம் எண்.2369 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.15

இந்நகராட்சி திட்டப்பணிகள் தொடர்பான விளம்பரத்தை தமிழ் சுடர் நாளிதழின் 22.08.2020 ஆம் தேதிய தொழில் மலரில் வெளியிட்ட வகையில், விளம்பர கட்டணம் ரூ.9975/- ஐ செலுத்த கேட்டு ESS ESS Publication Madurai அலுவலகத்திலிருந்து பட்டியல் எண். A // ADVT // AUG 2020 / 336 நாள் 24.08.2020 வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந..க.எண்.2045/2012/இ1

**தீர்மானம் எண்.2370 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.16

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் டெங்கு காய்ச்சல் நோய் தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ள 01.10.2020 முதல் 31.03.2021 வரை கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.A1/9953/2020 நாள் 14.07.2020-ன் படி, தினக்கூலி பணியாளர்களுக்கான ஊதியம் ரூ.615/-ல் DBC பணியாளர்களுக்கான பகுதிநேரம் பணிபார்த்ததற்கான ஊதியம் ஒரு நாளைக்கு ரூ.300/- வீதம் 17 பணியாளர்களுக்கான 01.10.2020 முதல் 31.03.2021 வரை 6 மாதங்களுக்கு வழங்குவதற்கும், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.8,30,000/- இந்நகராட்சி (162 Days x ரூ.300 x 17 Nos.) பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந..க.எண்.1182/2017/எச்1

**தீர்மானம் எண்.2371 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.17

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட குளச்சல் ‘B’ வில்லேஜ் புல எண்.E1-3-ல் உள்ள 0.02.24 ஏர் இடத்தில் முன்னாள் அமைச்சர் மாண்புமிகு லூர்தம்மாள் சைமன் அவர்களின் முழு உருவச்சிலை அமைப்பதற்கு அனுமதி பெற்றுத் தருமாறு தலைவர் குமரி மாவட்ட விசைப்படகு மீன்பிடிப்பவர் நல சங்கம் குளச்சல் என்பவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேற்படி இடம் இந்நகராட்சிக்குட்பட்ட புல எண்.E1-3-ல் CRZ-II நிலப்பகுதியில் உள்ள விண்ணப்பதாரருக்கு சொந்தமான பட்டா இடமாக உள்ளது. எனவே, மேற்படி இடத்தில் முன்னாள் அமைச்சர் மாண்புமிகு லூர்தம்மாள் சைமன் அவர்களின் முழு உருவச் சிலையினை நிறுவுவதற்கு அரசின் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடருமாறு தெரிவிக்க மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.791/2020/TPI

**தீர்மானம் எண்.2372 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.18

இந்நகராட்சியில் ஒப்பந்த பணிகள் மேற்கொண்ட வகையில் ஒப்பந்ததாரர்களால் செலுத்தப்பட்ட மற்றும் வேலைப்பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத் தொகை காலம்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் கீழ்காணும் விவரப்படி உள்ளது. எனவே, சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர்கள் பெயர் | பணி விபரம் | வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 1. | திரு.சி.செல்லநாடார் | வார்டு எண்.3,4,15,17,21,22,24 பேவர்பிளாக் மற்றும் காங்கிரீட் சாலை அமைத்தல். | ரூ.50000/- |
| 2. | திரு.சி.செல்லநாடார் | வார்டு எண்.3,4,15,17,21,22,24 பேவர்பிளாக் மற்றும் காங்கிரீட் சாலை அமைத்தல். | ரூ.50000/- |
| 3. | திரு.சி.செல்லநாடார் | வார்டு எண்..17 களிமார் மஹாவிஷ்ணு கோவில் அருகில் நூலக கட்டிடம் அமைத்தல். | ரூ.5000/- |
| 4. | திரு.சி.செல்லநாடார் | சாலை பராமரிப்பு பணிகள் 2016-17 | ரூ.4000/- |

ந.க.எண்.783/2019/பி1

**தீர்மானம் எண்.2373அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.19

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு 20 எண்ணம் ஆழ்துளை கிணறுகளிலிருந்து மின் மோட்டார்கள் மூலம் குடிநீர் 10 எண்ணம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் ஏற்றப்பட்டு இரண்டு நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் 33% குளோரின் அளவு கொண்ட பிளீச்சிங் பவுடர் 10 எண்ணம் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் கலக்கப்பட்டு சீரான முறையில் குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது 2020-21 ஆண்டிற்கு பிளீச்சிங் பவுடர் வாங்குவதற்கு தயார் செய்யப்பட்டட மதிப்பீட்டு தொகை ரூ.1,75,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.இ2/988/2020

**தீர்மானம் எண்.2374 அனுமதிக்கப்படுகிறது.**